DEPOSITION OF WITNESS
(Chapter XXII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE CHIEF JUDICIAL MAGISTRATE,
KRISHNAGIRI.

| | | |
|---|---|---|
| Sessions | : | CC. No. 283 of 2024 |
| Deposition of witness for | : | PW6 |
| Name | : | பிரசாந்த் |
| Father's Name | : | தங்கராஜ் |
| Village | : | ஆம்பள்ளி |
| Taluk | : | பர்கூர் |
| District | : | கிருஷ்ணகிரி |
| Profession | : | சிவில் இன்சினியர் |
| Age | : | 33 |

Solemnly affirmed in accordance with the provisions of Act 44 of 1969 of the 17th day of July 2025.

எதிரி ஆஜர். சாட்சி ஆஜர். சாட்சி சத்திய பிரமாணத்தின் பெயரில் விசாரிக்கப்பட்டார்.

<u>முதல் விசாரணை :–</u>

நான் தற்போது ஆம்பள்ளியில் குடியிருந்து வருகிறேன். சிவில் இன்சினியராக வேலை செய்து வருகிறேன். கடந்த 15.03.2021 ஆம் தேதி என் மாமா வேலு உறவினர் திருமணத்திற்கு இரு சக்கர வாகனத்தில் வள்ளுவர் புரத்திற்கு சென்று விட்டு திரும்ப வந்து கொண்டிருக்கும் போது குப்பம் – கிருஷ்ணகிரி ரோட்டில் பூசாரிப்பட்டி கூட்டு ரோடு அருகில் உள்ள ராயல் காலேஜ் அருகே பள்ளி பேருந்து என் மாமாவின் இரு சக்கர வாகனத்தின் மீது மோதி விபத்து ஏற்படுத்தியது குறித்து எனக்கு தகவல் தெரிய வந்தது. காலை 11.00 மணிக்கு எனக்கு தகவல் கிடைத்தது. நான் அவரை கிருஷ்ணகிரி அரசு மருத்துவமனைக்கு சென்று பார்த்தேன். அவர் இறந்து கிடந்தார். நான் குமார் மற்றும் வெங்கடேஷ் விபத்து நடந்த இடத்திற்கு சென்றோம். சம்பவ இடத்தில் போலீசார் விசாரணை செய்து வரைபடம் வரைந்தார்கள். அதில் நானும் மற்றொரு நபரும் சாட்சிகளாக கையெழுத்து செய்தோம். தற்போது என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரில் உள்ள முதலாவது கையெழுத்து என்னுடையது தான். அந்த பார்வை மகசர் **அ.சா.ஆ.2** ஆக குறியீடு செய்யப்படுகிறது. இவ்வழக்கு குறித்து போலீசார் என்னை விசாரணை செய்தனர்.

எதிரி தரப்பு குறுக்கு விசாரணை :–

பூசாரிப்பட்டி காலேஜ் அருகில் நான் இருந்ததாக போலீசார் விசாரணையின் போது சொல்லவில்லை என்றால் அரசு மருத்துவமனையில் இருந்துவிட்டு அதன் பிறகு சம்பவம் நடந்த இடத்திற்கு பார்க்கச் சென்றேன். படம் வரைந்ததில் அதில் என்ன எழுதப்பட்டுள்ளது என்ற விவரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். விபத்தில் இறந்தவர் எனது மாமா ஆவார். எனது மாமா என்பதால் அவருக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

மறு விசாரணை :–

இல்லை.

M SANTHI

CHIEF JUDICIAL MAGISTRATE,KRISHNAGIRI
Digitally signed by M SANTHI

தலைமை குற்றவியல் நடுவர்,
கிருஷ்ணகிரி.

DEPOSITION OF WITNESS
(Chapter XXII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE CHIEF JUDICIAL MAGISTRATE,
KRISHNAGIRI.

| | | |
|---|---|---|
| Sessions | : | CC. No. 283 of 2024 |
| Deposition of witness for | : | PW7 |
| Name | : | முருகன் |
| Father's Name | : | சின்னப்பன் |
| Village | : | B C புதூர் |
| Taluk | : | கிருஷ்ணகிரி |
| District | : | கிருஷ்ணகிரி |
| Profession | : | மளிகை கடை |
| Age | : | 51 |

Solemnly affirmed in accordance with the provisions of Act 44 of 1969 of the 17th day of July 2025.

எதிரி ஆஜர். சாட்சி ஆஜர். சாட்சி சத்திய பிரமாணத்தின் பெயரில் விசாரிக்கப்பட்டார்.

முதல் விசாரணை :–

நான் தற்போது B.C.புதூரில் குடியிருந்து வருகிறேன். மளிகை கடை வைத்து தொழில் செய்து வருகிறேன். கடந்த 15.03.2021 ஆம் தேதி கிருஷ்ணகிரி – குப்பம் மெயின் ரோட்டில் பூசாரிப்பட்டி அருகே சென்று கொண்டிருந்த போது மதியம் 12.30 மணி இருக்கும். அங்கு கூட்டமாக இருந்தார்கள். போலீசார் படம் வரைந்து கொண்டிருந்தார்கள். என்னிடம் கையொப்பம் வாங்கினார்கள். தற்போது என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரில் உள்ள இரண்டாவது கையொப்பம் என்னுடையது தான். விபத்து சம்பந்தமாக போலீசார் விசாரணை செய்து வரைபடம் வரைந்தார்கள். இவ்வழக்கு குறித்து போலீசார் என்னிடம் விசாரணை செய்தார்கள்.

எதிரி தரப்பு குறுக்கு விசாரணை :–

எனது ஊருக்கும் சம்பவம் நடந்த இடத்திற்கு சுமார் 8 கி.மீ. தூரம் இருக்கும். சம்பவ இடத்திற்கு எதற்காக சென்றேன் என்றால் அங்கு கோழிப்பண்ணை இருக்கிறது. நான் இரு சக்கர வாகனத்தில் அங்கு நான் மட்டும் சென்றேன். எனக்கு கோழிப்பண்ணை இருக்கின்ற சங்கதியை போலீசாரிடம் சொன்னேனா என்றால் சொன்னேன். நான் கையெழுத்தை

செல்வராஜ் காவல் உதவி ஆய்வாளர் பெற்றார். படத்தில் சம்பவ இடத்தில் எவ்வளவு தூரம் என்று உள்ளது என்ற விவரம் சொன்னார்களா என்றால் இல்லை. என்ன என்ன படம் போட்டார்கள் என்ற விவரம் தெரியாது என்றால் சரிதான். இறந்து போனவர் எனது உறவினர் என்பதால் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

<u>மறு விசாரணை :-</u>

இல்லை.

M SANTHI

CHIEF JUDICIAL MAGISTRATE,KRISHNAGIRI
Digitally signed by M SANTHI

தலைமை குற்றவியல் நடுவர்,
கிருஷ்ணகிரி.